

அருட்பணி.டினாட்டோ ஜோசப்
உதவிப் பங்குத் தந்தை
புனித.சூசையப்பர் ஆலயம்
போத்தனூர், கோவை மறைமாவட்டம்

# ஞாயிறு மறையுரை



**பொதுக்காலம்
16 ம் வாரம்
ஞாயிறு
21.07.2024**

**திருப்பலி வாசகங்கள்**
எரேமியா 23/1-6
எபேசியர் 2/13-18
மாற்கு 6/30-34

## ஆண்டின் பொதுக்காலம் – 16வது ஞாயிறு
## ஆயனும் அவருடைய மக்களும்

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டின் பொதுக்காலம் 16வது ஞாயிறை நாம் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இன்றைய நாளிலே திருவழிபாட்டு வாசகங்கள் அனைத்தும் நம்மை ஆயனும் அவருடைய மக்களும் என்ற தலைப்பில் சிந்திக்க அழைப்பு விடுக்கின்றது. ஓர் ஆயர் தன்னுடைய மந்தையை எப்படி பராமரிக்கின்றாரோ அதேபோல, நம்முடைய ஆண்டவர் நம்மை அவருடைய ஆடுகளாக, அவர் நேசிக்கும் மனிதர்களாக, அவருடைய செல்லக் குழந்தைகளாக வளர்ப்பதை இன்று நாம் சிந்திக்கவிருக்கின்றோம்.

முதல் வாசகத்தில், இறைவாக்கினர் எரேமியா, தங்கள் மக்களை தோற்கடித்த இஸ்ரவேலின் தலைவர்களுக்கு எதிராக பேசுகிறார். அவர்கள் தங்களுக்கு சொந்தமான மந்தையை கவனமாக வைக்கவில்லை, அதை சிதறடித்து தொலைத்துவிட்டனர். இருப்பினும் கடவுள், தம் மக்களை கூட்டிச் சேர்ப்பதற்காக, தாவீதின் வழியில் ஒரு நீதியான கிளையை எழுப்புவதாக வாக்களிக்கின்றார். இந்த வாக்குறுதி நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகின்றது. அவர் வருவார், தனது மந்தையை நீதியுடனும், இரக்கத்துடனும் வழிநடத்தி, என்றென்றும் வாழும் ஆயராக இருப்பார்.

திருப்பாடலான தியான பாடலிலும், இதே கருத்துதான் உள்ளது. அவர் நம்மை பாதுகாக்கும் போது, நமக்கு எந்த குறையும் இல்லாமலிருக்கும். எங்கு நடந்தாலும், எவ்வித ஆபத்துக்களும் நம்மை அணுகாது. ஏனெனில் அவர் நம்மோடு இருப்பதால், எந்த தீங்கிற்கும் அஞ்சத் தேவையில்லை என்று உறுதியோடிருக்க நம்மை உறுதிப்படுத்துகின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், புனித பவுல்; எபேசு நகர மக்களுக்கு தமது புரிதலைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். பிரிவினைகள் எதுவுமில்லாமல், எல்லா மக்களும் ஒரே மனதோடு வாழ வேண்டும் என்று

சொல்கின்றார். நம்மை எளிதில் பிரித்து வைக்கும் உலகில், அமைதி மற்றும் ஒற்றுமையோடு வாழ நம்மை அழைக்கின்றது.

நற்செய்தியில், இயேசு ஓர் இரக்கமுள்ள ஆயராக நமக்கு எடுத்துக்காட்டப்படுகின்றார். திருத்தூதர்கள் தங்களுடைய பணியை முடித்த பிறகு, இயேசு அவர்களை ஓய்வு எடுக்க அனுப்புகின்றார். ஆனால், மக்கள் கூட்டத்தைப் பார்த்து, அவர்கள் நெடுநாட்களாக அவரை பின்பற்றி வருவதால், அவர் அவர்களை இரக்கமுடன் காண்கிறார். அவர் அவர்களுக்கு பலவற்றைக் குறித்து எடுத்துக்கூறுகின்றார்.

நமக்கான பாடம் இதுதான்: கடவுள் மேல் நம்பிக்கை வைத்து, நீதியுடனும் இரக்கத்துடனும் செயல்பட்டு, அமைதி மற்றும் ஒற்றுமையின் முன்மாதிரிகளாக, நமது ஓய்விற்கான தேவையை பிறரது வாழ்வின் முன்னேற்றத்திற்காக செலவழிக்க பாடுபடுவோம்.

நமது வாழ்க்கையில், நம்மை சுற்றியுள்ளவர்களுக்கு ஆயர்களாக இருக்க அழைக்கப்படுகின்றோம். நமது குடும்பங்களில், பணியிடங்களில், சமூகங்களில், எங்கு இருந்தாலும், நமது நல்ல ஆயன் நமக்கு காட்டும் முன்மாதிரியை, அன்புடனும் இரக்கத்துடனும் மற்றவர்களை கவனிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கின்றது.

நாம் நம் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டவர்களை எப்படி வழி நடத்துகின்றோம்? அவர்களை நேர்மையுடன் வழி நடத்துகிறோமா? அவர்களின் தேவைகளை வழங்குகிறோமா? அவர்களுக்கு தேவையான ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்குகிறோமா? ஆயனின் இதயத்தை போல், தேவையில் உள்ள ஒவ்வொருவரையும் நம்மாலான உதவிகளால் தாங்குவோம். விண்ணகத் தந்தை நம்மை எந்நாளும் ஆசீர்வதித்து, நல்ல ஆயர்களாக, தன்னுடைய மகனைப் போல, இந்த பூமியில் வாழ நம்மை ஆசீர்வதிப்பாராக.

ஆமென்.

நல்லாயன் வழியில நடப்போம்.






# பொதுக்காலத்தின் 16-ஆம் ஞாயிறு

எரே. 23 : 1-6 எபே. 2:13-18
மாற். 6 : 30-34

**21-07-2024**



பா. சேவியர்
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

நல்லாயனாம் இயேசுவின் மந்தையில் உள்ள ஆடுகளாகிய எங்களுக்கு ஏது குறை என்ற நம்பிக்கையோடு வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் பொதுக் காலத்தின் 16-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

தன்னையே சிலுவையில் பலியாக்கி, பிரிந்து கிடந்தவர்களை ஒன்றிணைத்த இயேசுவைப் போல், வாழ்க்கைச் சிலுவையில் நம் அகந்தையைப் பலியாக்கி ஒற்றுமையின் கருவிகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

ஆண்டவரே நமக்கு ஆயர், நாம் அனைவரும் அவரது சொந்த ஆடுகள். அவர் நம்மோடு இருக்கும் போது குறையேதும் நமக்கு வராது. அவரே நம்மைப் பேணிப் பாதுகாத்து ஓய்வளித்து புத்துணர்ச்சி கொடுக்கின்றார் என்பதை இன்றைய வழிபாடு நமக்கு உணர்த்துகிறது.

இன்றைய வாசகங்கள் அனைத்தும் கிறிஸ்து வழியாக இறைவன் இவ்வுலகிற்குக் கொண்டு வந்த புதிய வாழ்வு பற்றிப் பேசுகின்றன.

யூதர்களைப் போல பகைமை என்னும் பழைய வாழ்வை வாழாமல், இயேசுக் கிறிஸ்துக் கொண்டு வந்த சமாதானம் என்னும் புதிய வாழ்வை நமதாக்கி, அதைப் பிறரோடு பகிர்ந்து நன்மக்களாக வாழ இத்திருப்பலியின் வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

உண்மை இறைவனை உதறித் தள்ளி வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் தன்னை ஓர் ஆயனாக இன்றைய முதல் வாசகம் வழியே வெளிப்படுத்து கின்றார். மந்தையைச் சிதறி யடிக்கும் போலி ஆயர்களை எச்சரித்து சிதறுண்ட ஆடுகளை ஒன்றிணைப்பதை எரேமியா விளக்குவதைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நாமனைவரும் இயேசுக் கிறிஸ்துவின் துன்பம் மற்றும் சாவு வழியாக புதியதொரு இனமாக மாற்றப்பட்டுள்ளோம் என்பதை இவ்வாசகத்தின் வழியே தூய பவுல் எடுத்துரைக்கின்றார். பகைமை என்னும் பழைய வாழ்வை அழித்து, ஒற்றுமையும் அமைதியும் நிரம்பிய புதிய வாழ்வை இயேசு கொண்டு வந்ததை விளக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) பரிவுள்ளம் கொண்ட நல்லாயனாம் எம் இறைவா, எம் திருத் தந்தை, ஆயர்கள், துறவறத்தார் மற்றும் பொது நிலையினர் அனைவரும் கிறிஸ்து கொண்டு வந்த புதுவாழ்வின் கருவிகளாகச் செயல்பட்டு, தியாகம் நிறைந்த அன்பு, சுயநலமற்ற மன்னிப்பு, வாழ்வு தரும் அமைதி, நிறைவு தரும் மகிழ்ச்சி ஆகியவற்றை மக்களிடையே பரப்பி வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) ஆடுகளின் மேல் அக்கறையும் இரக்கமும் கொண்ட இறைவா, உம் திருமகனின் இரத்தம் எங்கள் பாவங்களைக் கழுவி, எங்களிடையே பகைமையையும் விரோதத்தையும் போக்கி, சமாதானத்தைக் கொண்டுவந்து விட்டது என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, ஏற்றத் தாழ்வில்லா சமத்துவ சமுதாயமாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) களைப்பு நீங்கிப் புத்துணர்ச்சி பெற ஓய்வளிக்கும் இறைவா, எங்கள் குடும்பங்களின் முன்னேற்றத்திற்காக ஓய்வின்றி உழைத்து வரும் எம் பெற்றோர் மற்றும் மூத்த உறுப்பினர்களை நிறைவாக ஆசீர்வதியும். உம் சீடர்களுக்கு ஓய்வும் புத்துணர்ச்சியும் தந்ததுபோல் இவர்களுக்கும் தேவையான ஓய்வும் புத்துணர்ச்சியும் தந்தருளும். அதற்கு நாங்கள் உற்ற துணையாக இருந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) சிதறுண்ட ஆடுகளை ஒன்று சேர்த்த நல்லாயனாம் எம் இறைவா, உம் அழைத்தல் எந்த நிலையிலும் உண்டு என்பதை நாங்கள் உணர்ந்து, உமது அழைப்பை ஏற்று, உமது பணியினைச் சிறப்புடன் செய்ய நல்ல மனதையும், உடல் நலத்தையும், உறுதியான நம்பிக்கையையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.